



# சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை

## மானியக் கோரிக்கை எண் : 53

## அறிவிப்புகள்
## 2023 – 2024

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

மானியக் கோரிக்கை எண் : 53

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**திரு. உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

## சிறப்புத் திட்டச்
## செயலாக்கத் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சார்பில் 7 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

1. நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை செவ்வனே செயல்படுத்த அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் "நான் முதல்வன் திறன் மற்றும் வேலை வாய்ப்பு மையம்" நிறுவப்படும். ஒரு பொறியியல் கல்லூரிக்கு ரூபாய் 70 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 21.70 கோடி இதற்காக ஒதுக்கப்படும்.

100 உயர்தர கணினிகள், திறன்மிகு துணைக் கருவிகளுடன் அதிவேக இணைய இணைப்பு ஆகியவை ஒரு பொறியியல் கல்லூரிக்கு ரூ.50.00 லட்சம் செலவில் மொத்தம் ரூ.15.50 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

கணினி மேசைகள், கணினி நாற்காலிகள், அலுவலக மேசை நாற்காலிகள், வேலை வாய்ப்பு முகாம்களுக்கு தேவைப்படும் நேர்காணலுக்கான சிறப்பு ஏற்பாடுகளுக்கென ஒரு கல்லூரிக்கு ரூ.10.00 லட்சம் செலவில் மொத்தம் ரூ.3.10 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

இதற்கான செலவினம் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (TANSI) மூலம் வழங்கப்படும்.

இதர உட்கட்டமைப்பு வசதிகள், நவீன துணைக்கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதி மூலம் பொறியியல் கல்லூரிகளில் தேவைக்கு ஏற்ப மொத்தமாக ரூ.3.10 கோடி செலவில் வழங்கப்படும்.



**2. நான் முதல்வன் திட்டம் தொழிற்பயிற்சி நிலையங்கள், பாலிடெக்னிக் மற்றும் பிற தொழில்முறை படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்கென்று ரூ. 15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு ஒவ்வொரு பருவத்தேர்விலும் நான் முதல்வன் படிப்புகள் கட்டாயமாக்கப்படும்.

அனைத்து படிப்புகளும் திறன் அடிப்படையிலானதாகவும், மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையிலும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப பிரிவுகளில் (Emerging Technology) வழங்கப்படும்.

தகவல் தொடர்பு திறன்கள் மற்றும் டிஜிட்டல் திறன்கள் ஆகியவை நான் முதல்வன் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.

இறுதியாண்டில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற தேவையான திறன்கள் கற்பிக்கப்படும்.

இதற்கென்று ரூ. 15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தமிழ்நாட்டில் மரபுசார் கலை மற்றும் கைவினைத் திறன்களை மேம்படுத்துவதற்கும், இளைஞர்களின் மரபுசார் கலை மற்றும் கைவினைத் திறன்களை ஊக்குவிப்பதற்காகவும், கைவினைத் திறன் பள்ளிகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென்று ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அழிவின் விளிம்பில் உள்ள மரபுசார் கைவினை மற்றும் கலைத் திறன்களைக் கொண்ட கலைஞர்கள் கண்டறியப்பட்டு கைவினைஞர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

இளைஞர்கள் அதிக அளவில் இத்தகைய கலைகளை கற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படுவர். கைவினை கலைஞர்களுக்கென தனியே கைவினைத் திறன் பள்ளிகள் அறிமுகப்படுத்தப்படும்.

கைவினைஞர்களுக்கான திறன் பள்ளிகளை செயல்படுத்துவதற்காக ரூ 1.00 லட்சம் நிதியும் பொருட்கள் வாங்குவதற்காக கூடுதலாக ரூ 1.00 லட்சமும் வழங்கப்படும். தேவைக்கேற்ப இத்தொகை உயர்த்தித்தரப்படும்.

இதற்கென்று ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



4. விளையாட்டு அடிப்படையிலான கற்றல் தளம் (Gamified Platform) வழியாக அறிவாற்றல் திறன்களைக் கண்டறிந்து தனித்திறன் பெற்ற மாணவர்களை உருவாக்க பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் "நான் முதல்வன் ஒலிம்பியாட்" நடத்தப்படும். இதற்கென்று முதற்கட்டமாக ரூ.1.00 கோடி ஒதுக்கப்படும்.

நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக விளையாட்டு அடிப்படையிலான கற்றல் தளத்தில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஒலிம்பியாட் போட்டிகளில் பங்குபெற ஊக்குவிக்கப்படுவார்கள். நான் முதல்வன் தளத்தின் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கி அவர்களின் தனித்திறன் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப திறன் அடிப்படையிலான பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கு மாநிலம் முழுவதும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

முதல் 50 மாணவர்களுக்கு தலா ரூ.2.00 லட்சம் ரொக்கப் பரிசுடன் "தனித்திறன் சாதனையாளர்களாக" பாராட்டப்படுவார்கள். இதற்கென்று முதற்கட்டமாக ரூ.1.00 கோடி ஒதுக்கப்படும்.

## 5. மேம்படுத்தப்பட்ட அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் திறன் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்படும்.

மேம்படுத்தப்பட்ட 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் திறன் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்படும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் அளித்து இடைநின்ற மாணவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்படும்.

திறன்பெற்ற மனிதவளத்தை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்காக தொழில் துறையுடன் தேவையான ஒப்பந்தங்கள் செய்யப்படும்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பை பயன்படுத்தி மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும்.

திறன் படிப்புகள் குறுகிய காலத்திறன் பயிற்சியின் கீழ் கட்டமைக்கப்படும். மத்திய அரசு நிர்ணயித்துள்ள பயிற்சி கட்டணத்தின் அடிப்படையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துவதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இடைநின்ற மாணவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்படும்.



## 6. மாநிலத்தில் உள்ள அனைத்து திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் சான்றளிக்கும் அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) செயல்படும்.

தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுமத்தால் (NCVET) சான்றிதழ் வழங்கும் அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அங்கீகரிக்கப்பட்டவுடன், அனைத்து திறன் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சி மதிப்பீட்டின் தலைமை அமைப்பாக செயல்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தில் உள்ள அரசு தொழில் பயிற்சிநிலையம், பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அங்கீகாரம் செய்து, சான்றிதழ் வழங்கும் அமைப்பாக செயல்படும்.

முதன்மை பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை அங்கீகரிக்க ஒரு பொதுவான தளம் வடிவமைக்கப்படும்.

தற்போது செலவழிக்கப்படும் மதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து திறன் மதிப்பீட்டாளர்களுக்கு கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

முடிவுகள் நிகழ்நிலையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படும். நிகழ்நிலையில் சான்றிதழ்கள் உருவாக்கப்படும்.

**7. அடுத்த கல்வியாண்டில் கல்லூரிகளில் நான் முதல்வன் படிப்புகளை நடத்த முதன்மை பயிற்சியாளர்களின் தொகுப்பு உருவாக்கப்படும்.**

கடந்த ஆண்டு பல்வேறு திறன் படிப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் திறன், மதிப்பீடு செய்யப்படும்.

இம் மதிப்பீட்டின் அடிப்படையில் முதன்மை பயிற்சியாளர்கள் அடையாளம் காணப்படுவர்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான திறன் படிப்புகளைக் கையாளும் முதன்மை பயிற்சியாளர்களை ஊக்குவிக்க கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

மாணவர்கள் சமர்ப்பிக்கும் திட்டங்களை (Projects) மதிப்பிடுவதற்கு முதன்மை மதிப்பீட்டாளர்கள் அடையாளம் காணப்படுவர்.

திறன் பயிற்சியின் தரத்தை தொடர்ச்சியாக மேம்படுத்த, விருப்பமுள்ள முதன்மை பயிற்சியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.